405

தாரண௵ சித்திரை - வைகாசி௴ | ஸ்ரீ: | ஸம்புடம் - 4 ஸஞ்சிகை - 5

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

“அஹோபிலே காருடஶைலமத்யே க்ருபாவஶாத் கல்பித ஸந்நிதாநம்।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம் லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே॥”

பக்கம்

விஷய ஸூசிகை :—

1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் 39
2. திருப்பாவை 41
3. ஸ்ரீ பெரியாழ்வார் ராமாயணம் 43
4. செய்திகள் 45
5. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 47

May 45

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[5-ஆம் அங்கம்]

[ஸ்ரீ. உப. அன்பில் வி. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A.,B.L,
அட்வோகேட், திருச்சி]

[ஸம்புடம் 4, ஸஞ்சிகை 2, பக்கம் 12-ன் தொடர்ச்சி.]

இந்த அங்கத்திற்கு ‘டம்பாத்யுபாலம்பம்’ என்று பெயர். டம்பன் குஹநை தர்ப்பன் அஸூயை மஹாமோஹன் துர்மதி ஆகிய ஆஸுர பாத்ரங்களின் ஆடம்பரங்களும் மந்த்ராலோசனைகளும் இங்கே நடைபெறுகின்றன. கீதையின் பதினாறுவது அத்யாயத் தொடக்கத்தில் தைவ ஸம்பத்தான ... நற்குணங்களைக் கூறி, டம்பம் தர்ப்பம் அதிமானம் (கர்வம்), ...சொல், அஜ்ஞாநம் ஆகிய இவை ஆஸுர ஸம்பதென்று ...ம் மனத்திற்குள் ஆஸுர ஸம்பத்தான கெட்ட குணங்களுக் ...தான நற்குணங்களுக்கும் நடக்கும் போர் ஒரு தேவாஸுர ...த்தின் ஸஹாயத்தினால் நற்குணங்களைப் பயிற்சி செய்து, ...ர்த்தட்டான கெட்ட குணங்களை அடக்கி ஜயித்து

3L
Q22ணவ21'N41
N45.4.5
210137

மநஸ்ஸை மோக்ஷ மார்க்கத்தில் திருப்புவதை விளக்குவது இந்த நாடகம். தைவாஸுர ஸம்பத்துக்களுள் நடக்கும் யுத்தம் இங்கே எட்டாவது அங்கத்தில் வர்ணிக்கப்படுகிறது. உபாலம்பம் என்பது பிறரைத் தூஷித்துப் பரிஹஸிப்பது. டம்பன் தர்ப்பன் மஹாமோஹன் குஹனை முதலியவர்களின் தற்புகழ்ச்சி, பிறர் இகழ்ச்சி, ஆடம்பரப் பேச்சுக்கள், ஆகிய இவை இவர்களுடைய தோஷங்களையே ப்ரகாசப் படுத்துவதால் இவர்களையே பரிஹாஸத்திற்கு உள்ளாக்குகின்றன. டம்பாத்யுபாலம்பம் என்கிற பெயரில் 'டம்பாதிகளுடைய' என்கிற ஆரும் வேற்றுமையில் 'கர்த்தரி ஷஷ்டீ' என்னும் பொருளைக் கொண்டு இவர்கள் பிறரைச் செய்யும் பரிஹாஸத்தையும், 'கர்மணி ஷஷ்டீ' என்னும் பொருளைக் கொண்டு இவர்கள் பேச்சுக்களால் இவர்களுக்கே ஏற்படும் பரிகாஸத்தையும் ரஸமாகக் காட்டுவதில் நோக்கு.

ப்ரபோத சந்த்ரோதயத்தின் 2-வது அங்கத்தில் டம்பன் அஹங்காரன் மஹாமோஹன் முதலியவர்களின் ஆரவாரம். அங்கே மஹாமோஹனுடைய ராணிக்கு 'மித்யாத்ருஷ்டி' என்று பெயர். இங்கே அவளுக்குத் 'துர்மதி' என்று பெயர். பொய்யையே மெய்போலப் பார்ப்பது மோஹத்தின் கார்யமென்று அத்வைத மத ரீதி. கெட்டதை நல்லது போலப் பார்த்து நடப்பது மோஹத்தின் கார்யமென்று நம்முடைய ரீதி. '**अधर्मं धर्मं इति या मन्यते तमसावृता । सर्वार्थान्विपरीतांश्च बुद्धिस्सा पार्थ तामसी**' என்று கீதையின் முடிவத்யாயத்தில் பகவான் தாமஸ புத்தியின் லக்ஷணத்தைக் கூறியதற்கு ஒக்க, இங்கே மோஹனுடைய பத்நிக்குத் துர்மதி யென்று பெயரிடப்பட்டது. '**प्रवृत्तिं च निवृत्तिं च कार्याकार्ये भयाभये । बन्धं मोक्षं च या वेत्ति बुद्धिस्सा पार्थ सात्त्विकी**' என்று ஸாத்விக புத்திக்கும், '**यया धर्ममधर्मं च कार्यं चाकार्यमेव च । अयतवप्रजानाति बुद्धिस्सा-पार्थ राजसी**' என்று ராஜஸ புத்திக்கும் இலக்கணம் கூறப்பட்டது. பலனை உத்தேசித்துச் செய்து விரும்பும் பலனைத் தரும் ப்ரவ்ருத்தி தர்மத்தையும், பலனைக் கோராமல் ஈஶ்வராராதநமாகச் செய்யப்படும் மோக்ஷோபயோகியான நிவ்ருத்தி தர்மத்தையும், செய்யத் தக்கதையும், செய்யத் தகாததையும், பயத்தைத் தருவதையும், பயத்தைப் போக்குவதையும், பந்தத்தையும் மோக்ஷத்தையும் நன்கு பகுத்தறிவது ஸாத்விக புத்தி. தர்மத்தையும் அதர்மத்தையும் கார்யாகார்யங்களையும் உள்ளபடிக்கு மாறாக அறிவது ராஜஸ புத்தி. அதர்மத்தையே தர்ம மென்றும், தர்மத்தையே அதர்ம மென்றும், எல்லாப் பொருள்களையும் விபரீதமாக க்ரஹிப்பது தாமஸ புத்தி. உலகமே பொய் யென்று பார்ப்பதுதான் உண்மையான ஜ்ஞாநம் என்கிற கக்ஷிக்கு இந்த லக்ஷணங்கள் இடங்கொடா. யுத்தமெனும் க்ஷத்ரிய தர்மத்தையே அதர்ம மென்று மோஹித்துப் பயந்து நடுங்கித் தன் சோக மோஹங்களைத் தெளிவிக்கும்படி கண்ணனைச் சரணம் புகுந்து ப்ரார்த்தித்த அர்ஜுநனை உத்தேசித்துக் கீதையின் அவதரணம் செய்யப்பட்ட தென்று ஆளவந்தாருடைய கீதா முகவுரை, இந்த முடிவத்யாய ஶ்லோகங்களைக் கருத்தில் கொண்டது. முதல் அத்யாயத்தின் முடிவில், 'துக்கத்தால் மிகத் தளர்ந்த மனத்தனாய் அம்புடன் வில்லைக் கீழே போட்டுவிட்டுத் தன் தேர் நடு ஸ்தாநத்தை விட்டுப் பக்கவாட்டில் உட்கார்ந்தான்' என்று வர்ணித்தபடி, வில்லைக் கீழே எறிந்து விட்டவனை '[illegible]' என்று கீதையின் முடிவில் வர்ணித்தபடி வில்லும் கையுமாய்ப் போர் புரியச்செய்தது கீதை என்று உபக்ரமோபஸம்ஹார ஸ்வாரஸ்ய பராமர்சத்தால் ஏற்படும் ரஸத்தைச் சந்த்ரிகை காட்டிற்று. இதெல்லாம், அத்வைதத்திற்கும் உலகமே பொய் என்பதற்கும் பொருந்தாது. பதினேழாவது அத்யாயத்தில் ஶ்ரத்தை ஸாத்விகம் ராஜஸம் தாமஸம் என்று மூன்று வகையான தென்றும், சாஸ்த்ரீயமல்லாத யாகம் தவம் முதலியவற்றை எத்தனை ஶ்ரத்தையுடன் செய்தாலும் துக்கமே விளையு மென்றும், டம்பத்துடனும் அஹங்காரத்துடனும் காம மிகுதியால் க்ரியைகளை அநுஷ்டிப்பவர் கொடிய ஆஸுர புத்திகளே என்றும்

கூறப்படுகிறது. 'अभिसन्धाय तु फलं दंभार्थमपिचैव यः। इज्यते भरतश्रेष्ठ तं यज्ञं विद्धि राजसम्': பேர் வாங்கவேண்டுமென்று டம்பத்திற்காகச் செய்யப்படும் யாகங்கள் ராஜஸம். ஶ்ரத்தை யில்லாமல் செய்வது தாமஸம். 'आत्मसंभाविताः स्तब्धाः धनमानमदान्विताः। यजन्ते नामयज्ञैस्ते, दम्भेनाऽविधिपूर्वकम्,' என்று பதினாருவது அத்யாயத்தில் யஜ்ஞமென்று பெயர் மட்டு முடைய டாம்பிகமான வைதிக க்ரியைகளை நிந்தித்துள்ளது. இதையெல்லாம் திருவுள்ளத்தில் கொண்டு இந்த அங்கத்தில் டம்பன் குஹனை தர்ப்பன் இந்தப் பாத்ரங்களின் பேச்சுக்கள் அமைத்துள்ளன. குஹனை என்பது வஞ்சனை; மஹா வைதிகர்போல் பிறர் எண்ணும்படி வேஷம் போட்டு ஏமாற்றுதல். வஞ்சனையும் டம்பமும் ஒன்றை யொன்று தழுவியே நிற்கும். தான் தார்மிகன் என்பதை ஆடம்பரப்படுத்துவதற்காகத் தர்மங்களைச் சிறப்பாய் அநுஷ்டிப்பது டம்ப மென்றும், விஷயாநுபவ மிகுதியால் க்ருத்யாக்ருத்ய விவேகத்தை யிழந்து களிப்பு மதம் கொள்வது தர்ப்ப மென்றும் கீதாபாஷ்யம். தர்மத்வஜரா யிருப்பது டம்ப மென்று ஶங்கர பாஷ்யம். தர்மத்வஜ ரென்னும் சொல் அழகாகப் பொருந்துவதை யிட்டே அது இங்கே ஸ்வாமியால் பல்கால் ப்ரயோகிக்கப் படுகிறது. தர்மாநுஷ்டாநத்தை ஶ்ரத்தையுடன் ஆசரிப்பதைப் போல வேஷம் போடும் தம்பம் இங்கே முதல் பாத்ரம். டம்பனும், அவன் பத்நியாகிய குஹனையும், முதலில் இங்கே ப்ரவேசிக்கிறார்கள். ப்ரபோத சந்த்ரோதயத்தில் டம்பன் மஹாமோஹன் முதலியவர்களின் கொம்மாளம் கங்கைக் கரையில் காசிப் பக்கத்தில் நடக்கிறது. அது போல இந்த அங்கக் காட்சி கங்கைக் கரையில் அமைத்துள்ளது. முக்ய முக்தி க்ஷேத்ரங்களிலேயே மஹாமோஹனும் அவன் படர்களும் மநஸ்ஸைப் பிடித்துக்கொண்டு பேயாட்டமாட்டி வைக்கிறார்கள் என்று ரஸம். [தொடரும்.]

8-JUN 1945 MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

திருப்பாவை

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, அட்வோகேட், திருப்பாப்புலியூர்]

[ஸம்புடம் 4, ஸஞ்சிகை 4, பக்கம் 29-ன் தொடர்ச்சி]

இவ்வாறு வாயிற் காப்பானை நயந்து கேட்டு, அவனுடைய அநுமதியைப் பெற்று உள்ளே புகுந்து நந்தகோபர் முதலியோரைத் துயிலெழுப்புகிறார்கள்.

17. அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோ பாலா வெழுந்திராய்
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே
எம்பெரு மாட்டி யசோதா யறிவுறாய்
அம்பர மூடறுத் தோங்கி யுலகளந்த
உம்பர்கோ மானே யுறங்கா தெழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா
உம்பியும் நீயு முறங்கேலோ ரெம்பாவாய்.

அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும் — உடுக்கும் கூறையும் பருகும் நீரும் புசிக்கும் உணவும் அளவின்றி எல்லோருக்கும் எப்போதும் தானம் செய்யும் ஸ்வபாவமுடைய; எம்பெருமான் — நமது அதிபதியாகிய, நந்தகோபாலா — நந்தகோபாலனே!; எழுந்திராய் — நீர் துயிலெழ வேண்டும்; (உமக்கு ஸுப்ரபாதம் என்பது கருத்து.)

முன் பாசுரத்தில் 'நாயகனாய் நின்ற' வென்று நந்த கோபருக்கு ஜன்ம ஸித்தமான ஸ்வாமி பாவம் சொல்லப்பட்டது. இங்கு அந்த ஸ்வாமித் வம் எப்படி ஸர்வ ப்ரகாரமான ரக்ஷகத்வத்தால் நிறம் பெற்ற தென்பது சொல்லப்படுகிறது. 'அம்பரமே' என்று போக்ய வர்க்கமும், 'தண்ணீரே' என்று தாரக வர்க்கமும், 'சோறே' என்று போஷக வர்க்கமும் நிர்த்தேசிக் கப் படுகின்றன. ஏகாரத்தால் கார்த்ஸ்ந்யம் குறிக்கப்படுகிறது. ப்ரக்ருதி ரஞ்ஜநத்தால் ராஜ சப்தம் இவரிடத்தில் அந்வர்த்தமாயிற் றென்று தாத்பர்யம். இவ்விதம் ப்ரஜா ரக்ஷணத்தில் ஜாகரூகரா யிருக்கும் நீர் விழித்துக்கொண்டால் தான் உம்முடைய கை பார்த்து நிற்கும் ஸகல ப்ரஜைகளும் தரிக்க முடியு மாகையால் முற்பட நீர் துயிலெழவேண்டு மென்று ப்ரார்த்திக்கிறார்கள். ஸூர்யனுடைய உதயத்தால் ஸகல ஜீவராசிகளுக்கும் ஶரீர பாடவம் ஏற்படு கிறது போல், தேவரீர் எழுந்திருந்தால்தான் எங்கள் எல்லோருக்கும் ஸ்வ ரூப யோக்யதை உண்டாகு மென்று கருத்து. முன் பாசுரத்தில் த்வார பால கன் விஷயத்தில் துயிலெழுப்புவ தில்லாமை, அவன் எப்போதும் நித்ரை யின்றிக் காப்பவன் என்பதை ஸூசிக்கிறது. 'எம்பெருமானே' என்று ராஜாவை ஸம்போதித்த வுடன், 'எம்பெருமாட்டி' யென்று ராஜ மஹி ஷியை ஸம்போதிக்கிறார்கள். முதற் பாசுரத்தில் 'கூர்வேல் கொடுந் தொழிலன் நந்தகோபன் குமரன்' என்று முதலில் பிதாவை ப்ரஸ்தாவித்து, அநந்தரம்' ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்' என்று மாதாவை ப்ரஸ்தாவித்த க்ரமத்தை அநுஸரித்தே, இங்கும் பகவானுக்கு அந்தரங்கதை யின் தாரதம்யத்தைக் கணிசித்து முதலில் நந்தகோபரையும், பிறகு அவரை விட நெருங்கிய உறவுடைய யசோதைத் தாயையும் துயிலெழுப்புகிறார்கள்.

கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே — கொடி போன்ற மெல்லிய சரீரத்தையுடைய பெண்மணிகளுக் கெல்லாம் ம்ருதுதமமான கிஸலயம் போல் இருப்பவளே! இத்தால் இவளுடைய ஸௌகுமார்யாதிஶயம் சொல்லப் பட் டது. குலவிளக்கே — ஆயர் குலத்துக்கு ப்ரகாஶத்தைத் தரும் மங்கள தீபம் போன்ற காந்தியை உடையவளே! ஆயர் குலத்தினில் தோன்றும் மணிவிளக்கைப் பெற்று வளர்க்கும் பாக்யமுள்ள குல விளக்கு என்று தாத் பர்யம். ஆயர் குலம் என்று பொதுவாகக் கூறியதால், ஸர்வ தேஶங்களிலும் ஸர்வ காலங்களிலு முள்ள ஆயர் குலங்கள் இவளால் ப்ரகாச மடைந்தன வென்பது ஸூசிதம். எம்பெருமாட்டி யசோதா அறிவுறாய் — அஸ்மத் ஸ்வாமினியான யசோதா! நீ உணர வேண்டும் என்றபடி. 'எழுந்திராய்' என்னாமல் 'அறிவுறாய்' என்றதன் தாத்பர்யம், நித்ரை கலைந்து போதம் வந்த க்ஷணத்திலேயே படுக்கையிலிருந்து எழுவது உத்தம ஸ்த்ரீயின் ஸ்வபாவ மானபடியால், எழுந்திருப்பதைத் தனியாக ப்ரஸ்தாவிக்க வேண்டியதில்லை யென்பதாகும். புருஷன் விஷயத்தில் நித்ரா பங்கம் வந்தும், படுத்துக் கொண்டே மநஸ்ஸில் ஏதாவது யோசித்துக் கொண்டோ பகவத் த்யாநம் முதலியன செய்து கொண்டோ, அல்லது வேறு காரணமாகவோ எழுந்திருப் பதற்கு விளம்பம் ஏற்பட ப்ரஸக்தி உண்டென்றும் ஆனால் அது ஸ்த்ரீ ஸ்வபா வத்துக்கு ஒவ்வா தென்றும் கருத்து.

இவ்விதம் யசோதையை எழுப்பிப் பிறகு யசோதை யிளஞ் சிங்கத்தை எழுப்புகிறார்கள். அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர் கோமானே- த்ரிவிக்ரமாவதாரத்தில் ஆகாஶத்தை அடைத்துப் பரவி மேலே வளர்ந்து லோக த்ரயத்தையும் ஆக்ரமித்த தேவராஜனே! 'ஓங்கி யுலகளந்த வுத்தமன் பேர் பாடி' என்றது போல், இங்கேயும் பகவானை ஸ்தோத்ரம் செய்யும் ஸந் தர்ப்பத்தில் த்ரிவிக்ரமாவதார வைபவத்தைக் குறிப்பதால் ஶ்ருதி ப்ரஸித்த மான இவ்வவதாரத்தில் ஆண்டாளுக்குள்ள ப்ரதிபத்தி விஶேஷம் ஸூசித மாகிறது. 'உம்பர் கோமானே' என்றதால், உபேந்த்ரனாக அவதரித்ததால், இந்த்ரனுக்கு அவரஜனா யிருந்த போதிலும், அவனுக்கு அவரனல்ல வென்ப

தும், ப்ரத்யுத இந்த்ரன் உட்பட ஸகல தேவதைகளுடையவும் ரக்ஷகனென்பதும் குறிக்கப்பட்டது. அல்லது 'உம்பர் கோமான்' என்பதால் 'ஸஹா வஸூஜித் ஸஹீயஃ' என்று ஓதப்பட்டபடி அயர்வறு மமரர்கள் அதிபதி என்பது கூறப்பட்டதாகவும் கொள்ளலாம். இத்தால் உபய விபூதிநாதன் என்று சொல்லியதாயிற்று. உறங்காது எழுந்திராய் — நித்ராபிநயம் செய்யாமல் எழுந்திருக்க வேணும் என்றபடி. நித்ரா ஸங்கல்பத்தை விலக்கி எழுந்திருக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

இப்படி ப்ரார்த்தித்தும் பெருமாள் எழுந்திராமை கண்டு பலராமனை எழுப்புகிறார்கள். ஆதி சேஷாவதார மாகையாலும் எப்போதும் உறக்க மில்லாத ஸ்வபாவ முடையவ ரானபடியாலும் எழுப்புவது யுக்தமல்ல வென்று நினைத்து முதலில் எழுப்பாமல் விட்டதை உபசாரத் தவறுதலாக வெண்ணி, அவரை விசேஷித்து ஸ்தோத்ரம் செய்து எழுப்புகிறார்கள். செம்பொன் கழல் அடிச் செல்வா பலதேவா — செம்மையான; அதாவது, ஸர்வோத்தமமான ஸ்வர்ணத்தால் அமைக்கப்பட்ட தண்டையை அணிந்த திருவடிகளையுடைய ஸுஸம்பந்நனாகிய பலதேவா! இத்தால் பலராமன் அலங்கார ப்ரியரென்பதும் ஸ்தோத்ர ப்ரிய ரென்பதும் ஸூசிதமாகும். உம்பியும் நீயும் உறங்கேல் — உன் தம்பியும் நீயும் நித்ரை செய்யத் தகாது. ஸமஸ்த ஜகத் ரக்ஷகனான பகவானும் ஸர்வ ஜகத்தாரகனான நீயும் உறங்கினால், லோகம் என்ன கதியடைவது என்று தாத்பர்யம். ஏல் ஓர் எம்பாவாய் - முன்போல்.

[தொடரும்.]

ஸ்ரீ:

ஸ்ரீ பெரியாழ்வார் ராமாயணம்

[ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி, பஸவங்குடி, பெங்களூர்]

(ஸம்புடம் 4 ; ஸஞ்சிகை 4 ; பக்கம் 83-ன் தொடர்ச்சி)

இதைக் கேட்ட அன்னையின் முகத்தில் ஆஶ்சர்யம் பிரதிபலித்தது. "அப்பா! மேலும் அடையாளத்தைக் கூறுவாய். மேகத்தை எதிர்பார்க்கும் சாதக பக்ஷியைப் போன்ற எனக்கு ஸ்ரீ ராகவனின் கல்யாண குணங்களடங்கிய திவ்ய சரிதங்களே தாரகம்." என்றாள். அதைக் கேட்ட ஹனுமான் பின் வருமாறு கூறலுற்றான்:—"தங்கள் விவாஹ மஹோத்ஸவம் முடிந்த பிறகு ஸைங்யங்கள் மந்திரிகள் ஆசார்யர்கள் புடை சூழச் சக்ரவர்த்தி நூதன தம்பதிகளை அழைத்துக் கொண்டு அயோத்திக்கு வந்து கொண்டிருந்தார். மஹத்தான தவம் செய்த பரசுராமர் பெருமாளின் பராக்ரமச் செய்தியைக் கேட்டு ஓடி வந்து அவர்கள் செல்லும் மார்க்கத்தைத் தடுத்தார். அவர் இருபத்தொரு முறை பூப்ரதக்ஷிணம் செய்து துஷ்ட க்ஷத்ரியர்களாகிற களையை எடுத்து சிஷ்டர்களாகிற பயிரை ரக்ஷித்தவர். அவர் "ரகுராமா! உன் பராக்ரம மனைத்தும் கேள்விப்பட்டேன். தாடகை, ஸுபாஹு, மாரீசன், முதலிய அஸத்துக்களை அழித்தாயாம். கல்லா யிருந்த அஹல்யையைச் சாபந் தீர்த்து சிவதநுஸ்ஸை முறித்து, ஜானகியை மணந்துகொண்டு அடியார்களை ரக்ஷித்தாயாம். உன் கீர்த்தி வெள்ளம் எங்கும் பாய்ந்து ஓடுகிறது. மிகவும் ஸந்தோஷம். என்னிடம் ஓர் வைஷ்ணவ வில் இருக்கிறது. இதையும் வளைத்து உன் க்யாதியைப் பழுதாக்காமல் காப்பாற்றிக்கொள்." என்று வற்புறுத்தினார். இராமன் அதை ஒரு புஷ்பமாலையைப் போல் வாங்கி வளைத்து அம்பைத் தொடுத்தார். 'இப்பொழுது பாணத்தை எங்கே விடுவது?' என்று வினவினார். அப்பொழுது பரசுராமனது முகம் கொஞ்சமும் வாட்டமடையவில்லை. ரகு ராமா! உன்னால் நான் அவமானமடைந்தது எனக்குக் கீர்த்தியே ஆகும்.

अक्षय्यं मधुहन्तारं जानामि त्वां सुरेश्वरं । धनुषोऽस्य परामृशात् स्वस्ति तेऽस्तु परंतप ॥

இவ் வில் பரீக்ஷையினால் உன்னை ஸாஸ்வதனானவனும் மதுவை ஸம்ஹரித்தவனும், தேவாதி தேவனுமான பகவான் என்று அறிகிறேன். ஓ! பரம புருஷனே! உனக்கு மங்களமுண்டாகட்டும். நான் அருந்தவம் செய்து மிக்க புண்யம் ஸம்பாதித்திருக்கிறேன். அதை இலக்காகக் கொள் என்றார். அப்பொழுது ராகவன் பாணம் விடும் வியாஜத்தால் அவரிடமிருந்த வைஷ்ணவ தேஜஸ்ஸை ஆகர்ஷித்துக் கொண்டார். அவ்வில்லைக் கொண்டே பரசுராமர் அனேக உத்தம லோகங்களை அடைய அநுஷ்டித்த புண்ய பலன்களை அழித்தார். அதாவது அடைக்கல மடைந்தவர்களின் புண்ய கர்மாக்களின் பயனைப் பகவதர்ப்பணம் செய்ய வேண்டும் என்னும் ரஹஸ்யத்தைத் தெரிவித்தார். இது ஒரு சிறந்த அடையாளமல்லவா? என்றார் மாருதி.

ஸீதா தேவியின் வதநம் மலர்ந்தது. "ஆஞ்சநேயா! உன் ஸாமர்த்தியத்திற்கு மெச்சினேன். உன் வாக்கில் தான் என்ன நயம்! எவ்வளவு அழகு! என் நாதனது திவ்ய சரிதங்களைக் கேட்கக் கேட்க எனதுள்ளம் பரமானந்தமடைகிறது. பத்து மாத காலமாய்ப் பட்டினியிருந்த காதுகளுக்கு அம்ருதபாநமளிக்கிறாய். ஆனால் எனக்கு இன்னும் பூர்ண நம்பிக்கை உண்டாகவில்லை. ஒரு சமயம் ரஹஸ்யந் தெரிந்த விஸ்வாமித்ரர், வஸிஷ்டர் போன்ற மஹான்களிடமிருந்து விஷயங்களை அறிந்து கொண்டிருப்பாய். அவர்களுமறியாத ரஹஸ்யம் ஏதாகிலும் பிரபு கூறியிருந்தால் அதைச் சொல்லுவாய்." என்றாள்.

அதைக் கேட்ட சிறிய திருவடியின் உள்ளம் பூரித்து உற்சாகங் கொண்டது. பிராட்டியின் திருமேனியைத் திருவடி முதல் திருமுடி பர்யந்தம் ஸேவித்தார். தேவியின் கமலக் கண்கள் மலர்ந்தன. ஆதரமும், கிருபையும் பொழியக் கடாக்ஷிக்கும் அன்னையைப் பார்த்து,

அல்லியம்பூ மலர்க் கோதாய்! அடிபணிந்தேன் விண்ணப்பம்
சொல்லுகேன் கேட்டருளாய் துணைமலர்க்கண் மடமானே!
எல்லியம்போ தினித்திருத்த லிருந்ததோ ரிடவகையில்
மல்லிகை மா மாலை கொண்டங் கார்த்ததுமோ ரடையாளம்

மலர்ந்த அழகிய புஷ்ப மாலை போன்ற திருமேனி யுடைய தாயே! தேவரீர் கருணை சுரக்கும் கடாக்ஷங்களை ஸேவித்த என் மனம் மேன் மேலும் தைர்யமாய்ப் பேசுமாறு தூண்டுகிறது. இப்பொழுது ஒரு பரம ரஹஸ்யம் விண்ணப்பம் செய்யப் போகிறேன் கேட்டருள வேண்டும்.

रामस्तु सीतया सार्थं विजहार बहून् ऋतून् । मनसि ततगतस्तस्याः नित्यं हृदि समर्पितः ॥

பரசுராம கர்வ பங்கம் செய்த பிறகு ஸுகமாய் அயோத்யா புரியை அடைந்தீர்கள். பெருமாள் தங்களிடத்தில் அத்யந்தம் அநுராக முடையவரானார். தங்களது ஆறுக் காதலைப் பெற்றார். பரமபதத்தில் ரமித்தது போலவே அனேக ருதுக்கள் ஸுகம் அனுபவித்தீர்கள். மனிதர்களுக்குக் கிட்டாத மணங்கமழும் மல்லிகை மாலைகள் தேவலோகத்திலிருந்து வந்தன. அவைகளை அணிந்து மகிழ்வடையும் இனிமையாகிய ஓர் இரவில் திவ்ய தம்பதிகளாகிய தாங்களிருவரும் சதுரங்கமாடிக் களித்தீர்கள். அப்பொழுது ஸ்ரீ ராகவன் பந்தயத்தில் தோல்வியயைந்தார். தேவரீர் மேன்மை பொருந்திய மல்லிகை மாலையினால் சுவாமியைக் கட்டி வைத்தீர்கள். ஸர்வ லோகங்களையும் தன் ஸங்கல்பத்தினால் கட்டிக் காக்கும் ஸர்வேஸ்வரன் தங்கள் கை மாலையினால் கட்டுண்டார். ஆம்! இதிலென்ன ஆச்சர்யம்! பக்த பராதீநனன்றோ எம்பெருமான்! ப்ரணய கலஹத்தின் இப்பரம ரஹஸ்யத்தையும் ரகுராமன் என்னிடமுள்ள அன்பின் மிகுதியினால் உரைத்தார். இவ்வடையாளமாகிலும் தேவிக்கு என்னிடம் நம்பிக்கையை உண்டுபண்ணுமோ என்னமோ என்று சங்கிக்கிறேன்" எனப் புன்முறுவல் கொண்டார் மாருதி.

[தொடரும்]

ஸ்ரீ

செய்திகள்

---

(1)

ஸ்ரீ வேதாந்த தேசிக ஸ்ரீ பாஷ்யகார உத்ஸவ விக்ரஹ ப்ரதிஷ்டோத்ஸவம், புதுக்கோட்டை.

பல ஆஸ்திகர்களுடைய முயற்சியின் பலமாகப் புதுக்கோட்டை ஸம்ஸ்தாநம் கீழ் ...ன்றும் வீதியிலுள்ள ஸ்ரீ பெருந்தேவி நாயிகா ஸமேத ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஸந் ...நிதியில் நம் ஆசார்யோத்தமர்களான ஸ்ரீ பாஷ்யங்காரர் ஸ்ரீ வேதாந்த தேசிகன் இவர்க ளுடைய உத்ஸவ விக்ரஹங்களின் ப்ரதிஷ்டை சென்ற பங்குனி மீ 3௳ (16—3—45) வெள்ளிக்கிழமை தினம் நடந்தது. அதற்கு அங்கமாக நான்கு நாட்கள் முன்பே திங்கட் கிழமையன்று அங்குரார்ப்பணமாகி, மறுநாள் முதல் இரண்டு வேளைகளிலும் ஹோமம் வேதபாராயணம் திவ்ய ப்ரபந்த பாராயணம் முதலியன ப்ரதிதினமும் செய்யப்பட்டு வந் தன. விக்ரஹங்களுக்கு ஜலாதிவாஸம் க்ஷீராதிவாஸம் சயநாதிவாஸம் முதலான ஸம்ஸ் காரங்கள் யதாசாஸ்த்ரம் முறைப்படி செய்யப்பட்டு வெள்ளிக்கிழமை காலை மீன லக்நத்தில் ப்ரதிஷ்டை பூர்த்தியாயிற்று. அன்று ராத்ரி கோரதத்தில் பெருமாளும் ரதத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் வேதாந்த தேசிகன் இருவரும், வேதபாராயண திவ்யப்ரபந்த கோஷ்டிகளு டன் புறப்பாடாகி திருவீதிகளை அலங்கரித்தார்கள். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தி இந்த நாலைந்து தினங்களிலும் 'பொலிக பொலிக பொலிக' என்று ஆழ்வார் மங்களாசாஸநம் செய்ததுபோல் இருந்தது.

நான்கு நாட்களிலும் பாராயணம் முதலான கைங்கர்யத்தில் அநவயித்த ஸ்வாமிக ...ருக்கு, நகரத்திலுள்ள பல ஆஸ்திகர்கள் தனித்தனியாகத் ததீயாராதநம் செய்தார்கள். ...ரதிஷ்டையன்று விசேஷ ததீயாராதநமும் நடந்தது. ஸ்ரீ அஹோபிலமடம் திவ்யா ஸ்தா ... ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்ரீ வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், ஸர் S. வரதாசாரியர், சீப் ...ட்ஜ் R. ஸ்ரீநிவாஸாசாரியர், S. ராஜகோபால அய்யங்கார் (புதுக்கோட்டை) முதலான ...ற்றுமுள்ள பல ஶ்ரத்தையுள்ள மஹான்கள் இதற்கு ஸஹாயம் செய்து அநுக்ரஹித் ...ர்கள்.

ப்ரதிதிநம் ஸாயங்தாலம் வித்வான்களைக்கொண்டு உபந்யாஸங்களும் நடந்தேறின. ...ப் ஜட்ஜ் ஸ்ரீமான் R. ஸ்ரீநிவாஸாசாரியர் கோமல் சேஷாத்ரி அய்யங்கார், பம்பாய் ...டகோபாசாரியர் முதலான பலர் உபந்யாஸம் செய்தார்கள். புதுக்கோட்டை தர்பார் ...அவர்களின் ஆநுகூல்யமும் மற்றுமுள்ள பல பக்தர்களுடைய ஸஹாயமுமே இந்தக் ...கைங்கர்யம் நிர்விக்நமாக நிறைவேறினதற்குக் காரணம். புதுக்கோட்டை ம-ஸ்ரீ தர்ப்பார் அவர்களின் ஆநுகூல்யத்திற்கும் மற்றுமுள்ள பல பக்தர்களுடைய ஸஹாயத்திற்கும் எல் லோரும் கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். இப்போது மண்டலாபிஷேகம் திநமும் நடந்து வருகிறது. இதுபோலவே மற்றும் உத்ஸவங்களை ஆசார்யர்கள் கண்டருளவேண் டும் என்று ஸர்வேஶ்வரனை ப்ரார்த்திக்கிறேன்.

—முத்ராதிகாரி P.R. ரகுநாதாசார்யர்—கார்யதர்சி.

(2)

பம்பாயில் ஸ்ரீ. உப. வித்வான் பு. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி.

அநாதியான கர்மாவித்யாதி சக்ரமடியாக வந்திருக்கும் ஸம்ஸார ப்ரவாஹத்தில் அழுந்திக் கரைகாணாது தவித்திருக்கும் ஜீவனுக்கு ஏதோ ஒரு புண்ய கர்ம விசேஷத்தினால் ஸதாசார்ய கடாக்ஷம் ஏற்பட்டு, அதன் மூலமாக அந்த ஜீவன் பரமாத்மாவின் பரிபூர்ண க்ருபைக்குப் பாத்ரமாகிறான் என்பது சாஸ்த்ரார்த்த மாகையால், அம்மாதிரியான அத் ருஷ்ட விசேஷம் தத்காலம் பம்பாய் வாஸிகளான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு நேர்ந்திருக் கிறது. ஸ்ரீமதஹோபில மடத்தின் ஆஸ்தாந வித்வான் ஸ்ரீ உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி இவ்வூர் வாஸிகளுடைய ஸுக்ருத விசேஷத்தினால் இப்போது இவ்விடத்தில் எழுந்தருளியிருக்கிறார். ஸ்ரீ ஸ்வாமி கொஞ்ச காலம் கங்காதீர வாஸம் செய்யவேண்டு மென்கிற அபிஸந்தியுடன் ஸ்ரீரங்கத்திலிருந்து 22-3-45-ல் ப்ரயாணமாகி, வழியில் பட்டணத்திலும் துங்கபத்ரா நதிக்கரையிலும் தங்கி, இவ்வூருக்கு 25-3-45 காலை யில் எழுந்தருளினார். இவ்விடம் ஸ்வல்ப காலமாவது எழுந்தருளியிருந்து ஸத்விஷயங்களை ஸாதித்தருளவேண்டு மென்று இங்குள்ளோர் ப்ரார்த்திக்க, அதற் கிசைந்து அன்று முதற்கொண்டு உபக்ரமித்து ஸ்ரீ ஸ்வாமியால் 8—4—45 வரையில் ப்ரதிதிநம் ... முதல் 10-மணி வரையில் ஸ்ரீ பகவத்கீதையின் ஸாரமான விஷயங்கள் ...ட்டன. மிகவும் கடிநமான அம்சங்களையும் சிறு குழந்தைகளும் ...துகொள்ளும் வண்ணம் அபூர்வமான அர்த்த விசேஷங்களைக் கங்கா ...புஸித்தது ஆஶ்சர்யாநுபவமா யிருந்தது. 18—4—45-ல் நிகழும் ...நக்ஷத்ர மஹோத்ஸவம் வரையில் இவ்விடம் எழுந்தருளியிருந்து, ...னின் வைபவத்தையும் நம் ஸித்தாந்தத்தின் பெருமையையும் உபந்ய

ஸித்தருள வேண்டு மென்னும் அடியோங்களுடைய ப்ரார்த்தனையைத் தலைக்கட்டிவைக்கத் திருவுள்ளம் பற்றியிருக்கிறார்.

30—3—45 வெள்ளிக்கிழமை யன்று ஸ்ரீ ஸ்வாமிக்கு இவ்விடமுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களால், ஸ்ரீ. உப. சக்ரவர்த்தி விஜயராகவாசாரியர் ஸ்வாமியை முன்னிட்டுக்கொண்டு ஒரு ஸ்வாகத பத்ரிகை ஸமர்ப்பிக்கப்பட்டது. அந்த ஸமயம் ஸ்ரீ ஸ்வாமி பரம க்ருபையுடன் இவ்விடம் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் "ஸ்ரீ வேதாந்த தேசிக ஸம்ப்ரதாய ஸபை" யையும் திறந்துவைத்து, அந்த மஹா தேசிகன் ப்ரபாவத்தையும் அவர் உலகத்துக்குச் செய்திருக்கும் உபகார விசேஷங்களையும் விஸ்தாரமாக நிரூபித்தருளி, ஷ ஸபையின் உத்தரோத்தராபிவ்ருத்தியை ஆசீர்வதித்தருளினார்.

ஷ உபந்யாஸங்களைத் தவிர, திநந்தோறும் காலை நேரங்களில் ஆந்ஹிகம் காலக்ஷேபம் ஸாதித்தருளுகிறார்.

—ஸ்ரீ வைஷ்ணவ தாஸன்.

(3)

ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி வேத ஸாஹித்ய ஶாஸ்த்ர பாடஶாலா, திருவெவ்வுளூர்.

ஷ பாடசாலை ஆரம்பித்து இப்பொழுது 10 வருஷமாகிறது. ப்ரதி வருஷமும் தகுந்த ஶிரோமணி ஆசிரியர்களைக் கொண்டு கவர்ன்மென்ட் என்ட்ரன்ஸ் பரீக்ஷைக்கு வித்யார்த்திகளைத் தயார் செய்து, ப்ரதி வருஷமும் வித்யார்த்திகள் பரீக்ஷையில் தேறிவருகிறார்கள். ஒருவருஷம் ந்யாய ஶிரோமணி ப்ரிலிமினரி பரீக்ஷைக்குக் கவர்ன்மென்டில் உத்தரவு (Exemption) வாங்கி ஒரு வித்யார்த்தி பரீக்ஷையில் தேறினார். இதுவுமில்லாமல் வேதம் ஸாஹித்யம் ப்ரபந்தம் முதலான உபயுக்த வேத பாகங்கள் உபபாடங்களாக இந்த பாடசாலையில் வாசித்த வித்யார்த்திகளுடன் ஆங்கிலம் கற்கும் ஸ்கூல் பிள்ளைகளுக்கும் வித்யா தாநம் செய்யப்பட்டு வருகிற விஷயம் எல்லா ஆஸ்திகாக்ரேஸர்களுக்கும் தெரியும். இதுவரையில் என்ட்ரன்ஸ் பரீக்ஷைக்குப் போகும் உயர்தர வித்யார்த்திகளுக்கு மாத்ரம் இலவசமாக, ரூபாயைச் சில க்ருஹங்களில் கொடுத்துப் போஜநம் அ[illegible]கப்பட்டு வந்தது. அது வித்யார்த்திகளுக்கு த்ருப்திகரமாய் நடக்கவில்லை. இந்த பாடசா[illegible]யின் மானேஜிங் வைஸ் ப்ரெஸிடெண்ட் ஸ்ரீமான் L. C. ஸுந்தர வரதாசார்ய ஸ்வா[illegible] ஆஹார ஸௌகர்யங்கள் சரியாய் ஏற்படாததினால்தான் வித்யார்த்திகள் அதிகமா[illegible] சேருவதில்லை என்றும் தாம் இதுவரையில் கொடுத்துவருகிற மாதச் சந்தா தவிர ப்[illegible] மாதமும் ரூ. 100 அதிகமாக கொடுப்பதாகவும் அதற்கு 10 வித்யார்த்திகள் இன்[illegible] அதிகமாகச் சேர்க்கவேண்டுமென்றும், அவர்களின் ஆஹார ஸௌகர்யத்திற்காகப் பா[illegible] சாலையிலேயே பாசகர்களைக் கொண்டு ஹாஸ்டல் மூலமாய்ப் போஜந மேற்பாடு செ[illegible] வேண்டுமென்றும் அபிப்ராயப்பட்டிருக்கிறார். அதற்காகக் கோடைகால விடுமுறையா[illegible]தும் ஆனி மாதம் முதல் தேதி (14—6—45) முதல் ஹாஸ்டல் வைத்து வித்யார்த்திகளுக்கு ஆஹார ஸௌகர்யம் ஏற்படும்படியாகத் தகுந்த ப்ரயத்நம் நடந்துகொண்டிருக்கிறது. இதற்காக அட்வான்ஸ் இரண்டு முதல் சேரும் வித்யார்த்திக்கும், வேதத்தில் இரண்டு காண்டமாவது அத்யயநம் பண்ணி யிருப்பவர்களுக்கும், ப்ரபந்தத்தில் ஓர் ஆயிரம் பாசுரமாவது பூர்த்திசெய்திருப்பவர்களுக்கும் தான் ஆஹாரம் இலவசமாக அளித்து அதற்குமேல் அவர்கள் வித்யையைப் பூர்த்திசெய்து கொடுக்கப்படும். இந்த யோக்யதையுள்ள பிள்ளைகள் தாம், சித்தூர் அட்வகேட்டும் இந்தப் பாடஶாலை மானேஜிங் வைஸ் ப்ரெஸிடெண்டுமான ஸ்ரீமான் L. C. ஸுந்தர வரதாசார்ய ஸ்வாமிக்கு அடுத்த வைகாசி மாதம் 12-ம் தேதி (25-5-45) க்குள் மனு போட்டு, அவர் உத்தரவு பண்ணுகிற வித்யார்த்திகள் தாம் இந்த பாடசாலையில் சேரலாம். இந்த விஷயம் ஆஸ்தையுள்ள வித்யார்த்திகளுக்கு இந்தப் பத்ரிகை மூலமாய் தெரிவிக்கப்படுகிறது.

(4)

ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கரது 31-வது வார்ஷிக மஹாராதநம்.

ஸ்ரீமதஹோபில மடம் 38-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய், ஸ்ரீமதித்யாதி விஶேஷண விஶிஷ்டராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய வார்ஷிக மஹாராதநம் 30–வர்ஷ காலமாக, தில்லஸ்தாநம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகன் எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்களில் வெகு விமர்ஶையாக நடந்துவந்திருக்கிற தென்பது ப்ராயேண யாவர்க்கும் ஸுவிதிதம். அம்மஹோத்ஸவம் நிகழும் பார்த்திவ ஸூ சித்திரை மீ 23உ (5—5—45) சனிக்கிழமை திநம், பெருமாள் கோயிலுக்கு மேற்கேயுள்ள அவஹூர் அக்ரஹார[illegible] சாத்துமுறை பாதுகாதீர்த்தம் பாதுகா வீதிப்ரமணம் முதலிய ஸம்ப்ர[illegible] படியால், ஷ மஹோத்ஸவத்துக்கு ஸ்வாமிகள் எழுந்தருளி அ[illegible] டன் நடத்திவைக்கும்படி ப்ரார்த்திக்கிறோம்.

தில்லஸ்தாநம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா[illegible]

விதேயர்: அவஹூர் அ[illegible]

ஒரகடம் கோ. ஸுதர்சந[illegible]

210137

श्रीः
श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन् प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் யாத்ரோத்ஸவம்

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் கொஞ்சகாலம் பெங்களூரில் எழுந்தருளிவிட்டு, மறுபடியும் யாத்ரையாய் ப்ரதேஸாந்தரங்களுக்கு எழுந்தருளுகிறான் என்பதைக் கேட்டு நாம் ஸந்தோஷிக்கிறோம். பெங்களூரில் எழுந்தருளியிருக்கும் காலத்தில் அங்குள்ள பக்தோத்தமர்களால் ஆராதிக்கப்பெற்று திருவுள்ளம் போர உகந்து ப்ரஸாதோந்முகனாக எல்லோரையும் கடாக்ஷித்து வந்தான் என்பது உண்மையேயாயினும், விதேஸமானதால் கைங்கர்ய பார்களுக்கு அது கொஞ்சம் ஸ்ரமத்தைக் கொடுக்குமோ என்னும் ஒரு ஸங்கைக்கு இடம் இருந்தது. இப்பொழுது பூர்வ ஸித்தமான தேஸத்திற்கு எழுந்தருளிவிடுகிறபடியால் அந்த ஸங்கைக்கு அவகாசமில்லை. பெங்களூரைவிட்டுப் பத்துப்பதினைந்து திநங்கள் முன் புறப்பாடு ஆகி, பள்ளிக்கொண்டா கேதாண்டிப்பட்டி மார்க்கமாக வேலூருக்கு எழுந்தருளி, மத்யே மார்க்கத்தில் அநேக தந்யர்களால் ஆராதிக்கப்பெற்று இப்பொழுது பூண்டியில் எழுந்தருளியிருப்பதாக நாம் அறிகிறோம்.

सृष्ट्वा स्वयं जगदिदं तदनुप्रविश्य नामादिकं वितनुषे च यथाव्यवस्थम् ।
शास्सि त्वमेव कुत आक्रमणं त्वदन्यैर्मध्ये किमर्थमिह चङ्क्रमणं करोषि ॥

*　　　*　　　*　　　*

ஆசார்யர்களின் ரஸாநுபவங்கள்

ப்ருஹத் கத்யத்தில், ஸ்ரீ பாஷ்யகாரர், ஸ்ரீ ப்ரபத்தியை முடிக்குமிடத்தில், "पारमार्थिकी भगवच्चरणारविन्दशरणागतिर्यथावस्थिता अविरताऽस्तु मे" [தாம் அநுஷ்டிக்கப்போகும் பகவச் சரணாகதியானது பாரமார்த்திகமாகவும் யதாவஸ்திதமாகவும் இருக்கவேண்டும்] என்று ப்ரார்த்திக்கிறார். 'ஸரணாகதி பாரமார்த்திகையாக இருப்பது என்றால் என்ன? அது யதாவஸ்திதையாக இருப்பது என்றால் என்ன?" என்பது விளங்கவேண்டும். உள்ளும் புறமும் ஒத்து இருப்பதைப் பாரமார்த்திகமென்றும் உள்ளபடி இருப்பதை யதாவஸ்திதமென்றும் லோகத்தில் ஸாமாந்ய ஜநங்கள் வ்யவஹரிப்பார்கள். அப்பொழுது ... ஒரே கருத்தை உடையவை போலத் தெரிகின்றனவே தவிர்த்து ...த்தில் விசேஷம் இருப்பதாகத் தெரியவில்லை யென்று வருத்தமின்றிப் புரிகின்றது. ஸ்ரீ ஸ்ருதப்ரகாஸிகாசார்யர் இதை விளக்கு... ...ம் என்னும் பதம் 'தமோகுணத்தின் கார்யம் அதில் ... யதாவஸ்திதம் என்னும் பதம் 'ரஜோகுணத்தின் ... இல்லை' யென்பதையும் குறிக்கின்றது என்று அநுக்ரஹித்... தமோகுணத்தின் ஸ்வபாவம் ஆநுகூல்யாதிகளை ஸரீரமாக

உடைத்தாயிருப்பதை மறைத்துவிடும். அந்த ஆநுகூல்யாதிகளே ஶரீரமாக உடைத்தாயிருப்பதே உபாயாந்தரத்திலிருந்து ஶரணாகதியை வ்யாவர்த்திக்கும் ஸ்வரூபம். ஆனதால் அதை மறைக்கும் தமோகுணத்தின் கார்ய ரஹிதமாய் இருப்பதே பாரமார்த்திகத்வமென்று ஏற்படுகின்றது. அம்மாதிரியே 'யதாவஸ்தித' என்பதால் ரஜோகுணத்தின் கார்யம் வ்யுதாஸம் செய்யப்படுகின்றது. அதாவது, எதை விஷயமாகக்கொண்டு ஶரணாகதி நிற்கின்றதோ, அதன் ஸம்பந்த ரூபமான ப்ரகாரம் மாறுபாடாக க்ரஹிக்கப் படாமல் உள்ளபடி அறியப்பட்டு இருப்பதே என்று சொன்னதாயிற்று. ஶரணவரணத்திற்கு அநர்ஹமாயிருக்குமதை ஶரண்யமென்று க்ரஹித்து அதை ஶரணமாக அடைந்தால், அது அயதாவஸ்திதமான புத்தியாகுமன்றோ?

ஸ்ரீ ஶ்ருதப்ரகாஶிகையின் நிர்வாஹம் இப்படி யிருக்க, ஸ்வாமி தேஶிகன் அந்த ரஸத்தை ப்ரகாராந்தரமாக அநுபவிக்கிறார், அது என்னவென்றால் :—ஶரணாகதியின் ஸ்வரூபமானது ப்ரார்த்தனையை முன்னிட்டு பரத்தை ஸமர்ப்பிப்பதே ; அதுவும் ஶரண வரணத்திற்கு அர்ஹமாயிருக்குமதையே விஷயமாக உடைத்தாயிருத்தல் வேண்டும். இப்படி ஸ்வரூபத்தாலும் விஷயத்தாலும் வைபரீத்யம் நேராமல் இருப்பதே ஶரணாகதியின் பாரமார்த்திகத்வம். ப்ரகாரத்தாலும் அங்கத்தாலும் ஏற்படும் அந்யதாபாவம் வராமல் இருப்பது யதாவஸ்திதத்வம்: அதாவது, பல ஸங்க த்யாகம் கர்த்ருத்வ த்யாகம் இவைகளால் விரஹிதமாயிராமல் இவைகளுடன் கூடியிருப்பதே யதாவஸ்திதத்வம் என்று சொன்னதாயிற்று. விஷயத்தால் ஏற்படும் வைபரீத்யத்தை தமோகுணத்தின் கார்யமென்று சொல்லி அந்த வைபரீத்ய விரஹத்தை யதாவஸ்திதத்வமென்பது ஸ்ரீ ஶ்ருதப்ரகாஶிகையின் நிர்வாஹம் ; அந்த வைபரீத்யத்தைத் தமோகுணத்தின் கார்யமென்று சொல்லி அந்த வைபரீத்ய விரஹத்தைப் பாரமரர்த்திகத்வமென்பது ஸ்ரீ தேஶிகனுடைய நிர்வாஹம். ஆநுகூல்யாதிகளாகிற அங்கங்களின் ஸாஹித்யம் பாரமார்த்திகத்வத்தால் சொல்லப்படுகின்றதென்று ஸ்ரீ ஶ்ருதப்ரகாஶிகை; அது யதாவஸ்திதத்வத்தால் குறிக்கப்படுகின்றதென்று ஸ்ரீ தேஶிகன்.

இந்த விஷயமாக வேறு ஒரு விவக்ஷையை சில வித்வாங்கள் தர்ஶித்திருப்பதை நாம் கேட்டிருக்கிறோம். அது என்னவென்றால் :—ஶரணாகதி ஸ்வார்த்தமாகவும் இருக்கலாம். ஸ்வார்த்தமிராமலும் இருக்கலாம். விபீஷணன் த்ரௌபதி முதலானவர்கள் செய்த சரணாகதி ஸ்வார்த்தமாகச் செய்யப்பட்டவை; ஸ்வப்ரயோஜநகந்தத்தின் ஸம்பாவனைக்கே அவகாஶமிராமல் இருக்கும் ஹநுமத்ப்ரப்ருதிகள் விஷயத்தில் அது பரார்த்தமாகவே இருக்கவேண்டுமன்றோ? ஸ்வார்த்த வரணத்தைக் காட்டிலும் பரார்த்தவரணம் பரமார்த்தமானதால் அதுதான் பாரமார்த்திகத்வத்தின் லக்ஷணம் என்பதுதான்.

ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையோ வேறு ஒரு விவக்ஷையை அநுக்ரஹித்திருக்கிறார். "பாரமார்த்திகீ - ஆர்த்த ரூபையாயிருக்கை. யதாவஸ்திதா- உபாயாந்தரங்களுடைய அநுபாயத்வ புத்திபூர்வகமாக அத்தைப் பற்றுகை போலே காணும் 'யதாவஸ்திதா' என்பது. இருந்தபடியே என்றபடி. ரஹஸ்யமாகையாலே நேராக வெளியிடாதொழிகிறார்." மஹான்களின் அநுபவ ஸ்வாரஸ்யத்தை என் சொல்வோம்?

* * * *

पायूपस्थेऽपानम्; चक्षुःश्रोत्रे मुखनासिकाभ्यां प्राणः स्वयं प्रतिष्ठते; मध्ये तु समानः, एष ह्येतद्धुतमन्नं समं नयति, तस्मादेतास्सप्तार्चिषो भवन्ति ॥ ५॥

हृदि ह्येष आत्मा। अत्रैतदेकशतं नाडीनाम्। तासां शतं शतमेकैकस्याम्। द्वासप्ततिर्द्वासप्ततिः प्रतिशाखानाडीसहस्राणि भवन्ति। आसु व्यानश्चरति ॥ ६॥

தனித்தனியாக விநியோகித்து, **सन्निधत्ते** [க்ரமஸ்தாநீயமான தனது அம்சமாகிற அபாநம் வ்யாநம் முதலியவைகளின் வழியாக] அதிஷ்டாநம் செய்கிறது.

---

5. [ப-ரை.] **पायूपस्थे** - பாயு உபஸ்தம் இந்த விடங்களில், **अपानम्** - [மூத்ர புரீஷங்களை வெளிப்படுத்திக்கொண்டு] அபாநவாயு ரூபமாக, [**प्रातिष्ठते** - அதிஷ்டாநம் செய்துகொண்டிருக்கிறது.] **चक्षुःश्रोत्रे** - கண்களிலும் காதுகளிலும், **मुखनासिकाभ्याम्** - முகத்திலிருந்தும் மூக்கிலிருந்தும் வெளிப்பட்டுக்கொண்டு, **प्राणः** - ப்ராணவாயு ரூபமாக, **स्वयम्** தானே, **प्रातिष्ठते** - அதிஷ்டித்து நிற்கின்றது. **मध्ये तु** - நடுவிலோ வென்றால், **समानः** - ஸமாந வாயு ரூபமாக நிற்கின்றது. **एष हि** இதுவே, **एतत् हुतमन्नम्** - புஜிக்கப்படும் இந்த அந்நம் முதலியவைகளை, **समं नयति** - [ஏழு தாதுக்களாகப் பிரித்து] ஸமமாகச் செய்கின்றது. **तस्मात्** - அதிலிருந்து **सप्त अर्चिषः** - [காளீ கராளீ முதலான] ஏழு ஜ்வாலைகள், **भवन्ति** - உண்டாகின்றன.

---

6. [ப-ரை.] **एष आत्मा** ஜீவாத்மா, **हृदि हि**-ஹ்ருதயத்திலன்றோ [ஸமாந ரூபமான வாயு எவ்விடத்தில் ஸஞ்சரிக்கிறதோ அவ்விடத்தில்], இருக்கிறான். **अत्र** - அந்த இடத்தில், **एतत् नाडीनां एकशतं** [**वर्तते**] - நூற்றொரு நாடிகள் இருக்கின்றன. **तासां** - அந்த [நூற்றொரு] நாடிகளுள், **एकैकस्याम्** - ஒவ்வொன்றிலும், **शतं शतम्** - நூறு நூறு நாடிகள் உண்டு. [அதாவது: 100×101 [பதினாயிரத்து நூறு]. [**पुनरपि**] **द्वासप्ततिः द्वासप्ततिः प्रतिनाडीसहस्राणि** - [மறுபடியும் இந்தப் பதினாயிரத்து நூற்றினுள் ஒவ்வொன்றிலும்] எழுபத்தீராயிரம் ப்ரதிநாடிகள் [அதாவது: $72000 \times 10100 = 727200000$, எழுபத்திரண்டு கோடியே எழுபத்திரண்டு லக்ஷம் கிளைகளாகப் பிரிந்து தேஹம் முழுவதும் ஓடி நிற்கின்றன], **भवन्ति** - இருக்கின்றன. **आसु** - இந்த நாடிகளில், **व्यानः** - வ்யாந ரூபமான வாயுவானது, **चरति** - ஸஞ்சரிக்கின்றது,

प्रतिशाखाः-शाखाभ्यो निर्गता अल्पशाखाः [முக்ய கிளைகளிலிருந்து வெளிப்படும் உப கிளைகளுக்கு 'ப்ரதிசாகைகள்' என்று பெயர்].

अथैकयोर्ध्व उदानः पुण्येन पुण्यं लोकन्नयति पापेन पापम् उभाभ्यामेव मनुष्यलोकम् ॥ ७ ॥

आदित्यो ह वै बाह्यः प्राणः; उदयत्येष ह्येनं चाक्षुषं प्राणमनुगृह्णानः; पृथिव्यां या देवता सैषा पुरुषस्यापानमवष्टभ्य । अन्तरा यदाकाशस्स समानः । वायुर्व्यानः ॥ ८ ॥

---

7. [ப - ரை.] **अथ एकया** -இந்த நாடிகளுள் ஒன்றால், **ऊर्ध्व उदानः** மேல் நோக்கிப்போகும் உதாநம் என்னும் வாயுவானது, **पुण्येन** - புண்ய கர்மம் காரணமாக, **पुण्यं नयति** - [ஸ்வர்க்கம் முதலிய] புண்ய லோகத்திற்கு நயிப்பிக்கின்றது. **पापेन** - பாபம் காரணமாக, **पापम् नयति** - [நரகம் முதலிய] பாப லோகத்திற்கு நயிப்பிக்கின்றது. **उभाभ्याम्** - இரண்டும் காரணமாக [அதாவது: புண்யம் பாபம் இரண்டும் ஸமமாக இருந்தால்], **मनुष्यलोकम् नयति** - மநுஷ்ய லோகத்திற்கு நயிப்பிக்கின்றது.

இந்த நாடி முதலில் சொல்லப்பட்ட நூற்றொரு நாடிகளுள் ஒன்று. அது ஒன்றுதான் மேல்நோக்கிப் போகின்றது. அதற்கு 'ஸுஷும்மா' என்று பெயர். தேஹத்தை விட்டு ப்ராணன் வெளியில் போவதற்கு இது தான் ஸாதநம்.

'தன்னை ஐந்து விதமாகப் பிரித்துக்கொண்டு எப்படி ப்ராணன் ப்ரதிஷ்டை பெறுகின்றது?' என்று கேட்ட ப்ரஶ்நத்திற்கு "**यथा सम्राट्**" என்பது முதல் "**मनुष्यलोकम्**" என்னும் பர்யந்தம் ஸமாதாநம் சொல்லப்பட்டது. இதன் நடுவில், 'எப்படி வெளியில் புறப்பட்டுப் போகிறது?' என்னும் ப்ரஶ்நத்திற்கு இந்த 7-வது மந்த்ரம் ஸமாதாநம்.

---

8. 'பாஹ்ய ரூபமாக எப்படி ஸந்நிஹித மாகின்றது?' என்னும் ப்ரஶ்நத்திற்கு இது ஸமாதாநம். இந்த ப்ராணன் ஶரீரத்துக்குள் இருப்பதுபோல ஶரீரத்திற்கு வெளியிலும் இருந்துகொண்டு, ஶரீரத்திலுள்ள இந்த்ரியங்களுக்கு உபகாரத்தைச் செய்துகொண்டிருக்கிறது என்பது இதனால் தெரிகின்றது. உயர ஸூர்யனாக இருந்துகொண்டு, கண்ணாகிற இந்த்ரியத்திற்கு வெளிச்சம் என்னும் ஸஹகாரியைக் கொடுத்து உபகரிக்கின்றது. கீழில் பூமியிலுள்ள ப்ராண கலையாக இருந்துகொண்டு பாயு உபஸ்தம் இந்த இந்த்ரியங்களுக்கு அபாந வ்ருத்தியாகிற அபகர்ஷணத்தைச் செய்து உபகரிக்கின்றது. நடு ப்ரதேஶத்தில் ஆகாஶமாக இருந்துகொண்டு ஸமாந வாயுவின் வ்ருத்தியாகிற அந்ந ஸமீகரணத்தைச் செய்விப்பதில் உபகரிக்கின்றது. இம்மாதிரி இந்த்ரியங்களுக்குச் செய்வதே இந்த ப்ராணனுடைய பாஹ்ய ஸந்நிதாநத்தின் ப்ரயோஜநம்.

[ப - ரை.] **आदित्यो ह वै** - ஸூர்யனன்றோ, **बाह्यः प्राणः** - வெளியிலிருக்கும் ப்ராணன்? **एषः** - இது, **एवं चाक्षुषं प्राणम्** - கண்ணில் இருக்கும்

तेजो ह वा उदानः ; तस्मादुपशान्ततेजाः पुनर्भवमिन्द्रियैर्मनसि संपद्य-मानैः ॥ ९ ॥

यच्चित्तस्तेनैष प्राणमायाति प्राणस्तेजसा युक्तः । सहात्मना यथा सङ्कल्पितं लोकं नयति ॥ १० ॥

இந்த ப்ராணனை, **अनुगृह्णानः**-அநுக்ரஹித்துக்கொண்டு, **उदयति हि** - உதயமாகின்றது. [ப்ரகாஶத்தைக் கொடுத்து அது வழியாக உபகாரம் செய்கின்றது.] **पृथिव्यां या देवता**-பூமியில் யாதொரு ப்ராண கலை உண்டோ, **सैषा**-அந்தக் கலையானது, **पुरुषस्य**-இந்தத் தேஹத்தினுடைய, **अपानमवष्टभ्य** அபாநவ்ருத்தியை வஶீகரணம் செய்துகொண்டு [உபகரிக்கின்றது]. **यदाकाशः** - [மத்ய ப்ரதேஶத்தில்] யாதொரு ஆகாஶமுண்டோ [அங்குள்ள ப்ராண கலையானது], **सः** - அது, **समानः** - ஸமாந வாயு ; [ஸமாந வாயு செய்யவேண்டிய வ்யாபாரத்தில் உபகரிக்கின்றது]. **वायुः** [வெளியிலுள்ள] வாயுவானது, **व्यानः** - வ்யாந வாயு; [வ்யாந வாயு செய்ய வேண்டிய வ்யாபாரமாகிற த்வக் [தோல்] வ்ருத்தியில் உபகரிக்கின்றது.

---

9 - 10 இந்த மந்த்ரங்களில் சொல்லப்படும் விஷயமாவது:—இவ்விடத்தில் பாஹ்யஸ்திதிதேஜோரூபமென்று சொல்லப்படுகிறது. அந்தத் தேஜஸ் உதாந வாயுவின் வ்யாபாரத்திற்கு உபகாரத்தைச் செய்கிறது. ப்ராணனைத் தேஹத்திலிருந்து வெளிப்படுத்துவது உதாந வாயுவின் வ்ருத்தி. மேல் நோக்கிப் போகும் நாடி வழியாகப் புண்யலோகத்திற்கும் பாப லோகத்திற்கும் அது ப்ராணனை நயிப்பிக்கிறதென்று கீழே சொல்லியிருக்கிறதன்றோ ? தேஹத்திலிருந்து, தேஜஸ் [அதாவது: உஷ்ணம்] வெளிப்பட்டால், அப்பொழுது புருஷன் மூர்ச்சையாகிறான். அப்படி மூர்ச்சையாக இருக்கும்பொழுது வாக் முதலிய இந்த்ரியங்கள் தம்தம் வ்யாபாரங்களிலிருந்து ஒழிவடைந்து மநஸ்ஸில் ஸம்பத்தி அடைகின்றன. அவ்விதம் மநஸ்ஸில் ஸம்பத்தியை அடைந்த இந்த்ரியங்களுடன் நிற்கும் ப்ராணனை, ஜீவன், தன்னால் அப்பொழுது இச்சிக்கப்படும் ஜந்மத்தை அடையப்போகிறவனாய் அடைகின்றான். அந்த ப்ராணன் அந்த ஜீவனை எந்த லோகத்திற்கு அவனைக் கொண்டுபோய் விட வேண்டுமோ அந்த லோகத்திற்கு நயிப்பிக்கின்றது.

இதில் ஒரு விஷயம் கவனிக்கவேண்டியது உண்டு. மரணம் நேருங்காலத்தில் வாக் முதலிய இந்த்ரியங்கள் மநஸ்ஸில் ஸம்பத்தியை அடைகின்றன வென்பது வேறு இடங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், ஓரிடத்திலும் ஜீவன் ப்ராணனை அடைவதாகச் சொல்லப்படவில்லை ; ப்ராணன் ஜீவனை அடைவதாகவே சொல்லப்பட்டிருக்கின்றது. "**सोऽध्यक्षे**" [**सः** - அந்த ப்ராணன், **अध्यक्षे** இந்த்ரியங்களுக்கு அதிபனாயிருக்கிற ஜீவனிடத்தில், **संपद्यते** - ஸம்பத்தியை அடைகின்றான்] என்பது

य एवं विद्वान् प्राणं वेद। न हाऽस्य प्रजा हीयतेऽमृतो भवति तदेष श्लोकः ॥ ११ ॥

उत्पत्तिमायतिं स्थानं विभुत्वञ्चैव पञ्चधा।

ஸ்ரீ வ்யாஸ ஸூத்ரம். அப்படி யிருக்கையில், இவ்விடத்தில் 'ஜீவன் ப்ராணனை அடைகிறான் என்று சொல்லப்பட்டிருப்பது எப்படி?' என்று ஒரு ஶங்கை உதிக்கலாம். அதற்கு ஸமாதாநம் ஒன்றே. அதாவது: இந்த ப்ரகரணம் ப்ராணனை ப்ரஶம்ஸிக்கிற ப்ரகரணமாகையால், அப்படிப் பேசப்பட்டிருக்கிறது. என்றே உபபத்தி சொல்லவேண்டும்.

[ப - ரை.] **तेजो ह वै** [வெளியில் இருக்கும்] தேஜஸ்ஸே, **उदानः**- உதாந வாயு, [உதாந வாயுவுக்குத் தேஜஸ் அநுக்ராஹகமாக இருக்கிறபடியால், அதுவே உதாநவாயு வென்று உபசாரமாகப் பேசப்படுகிறது.] **तस्मात्** - ஆகையால் [அந்தத் தேஜஸ்ஸானது தேஹத்திலிருக்கும் உதாந வாயுவை அநுக்ரஹியாமல் நின்றுவிட்டால், அப்பொழுது தேஹத்தி லுள்ள ஔஷ்ண்யம் குறைந்துவிடுகிற தானதால்], **उपशान्ततेजाः** - உஷ்ணம் ஶாந்தமாகி மூர்ச்சாவாக இருக்கும் ஜீவன், **यच्चित्तः** - எதை விரும்பிக்கொண்டு [எந்த ஜந்மத்தை அடையவேண்டுமென்று விரும்புகிறானோ], **तेन** - அந்த விருப்பத்தின் வஶத்தால், **पुनर्भवम्** - மறுபடியும் உத்பத்தியை அடைவதற்கு, **मनसि संपद्यमानैः इन्द्रियैः सहितम्** - மநஸ்ஸில் ஸம்பத்தியை அடைந்திருக்கும் இந்த்ரியங்களுடன் கூடியிருக்கும், **प्राणम्** ப்ராணனை, **आयाति** - அடைகிறான். **प्राणः** - அந்த ப்ராணன், **तेजसा युक्तः** - பரமாத்மாவுடன் ஸம்யுக்தனைக் கொண்டு, **आत्मना यथासङ्कल्पितम्** - அந்தந்த ஜீவாத்மாவால் இச்சிக்கப்பட்ட, **लोकम्** - லோகத்திற்கு, **नयति** நயிப்பிக்கின்றது.

இந்த மந்த்ரங்களில், ப்ராணனுடைய பாஹ்ய ஸந்நிதாநம் சொல்லப்படுவதுடன், 'அத்யாத்ம ஸ்திதி எப்படி?' என்னும் கடைசி ப்ரஶ்நத்திற்கும் ஸமாதாநமும் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைக் கவனிக்கவேண்டும்.

---

11. [ப - ரை] **यः** - எவன், **एवम्** - இவ்வாறு, **विद्वान्** - அறிந்தவனாய், **प्राणम्** - ப்ராணனை, **वेद** - உபாஸிக்கிறானோ, **अस्य** - அவனுக்கு, **प्रजाः** - புத்ர பௌத்ராதிகளான ஸந்ததி, **न हीयते** - ஹாநியை அடைகிறதில்லை. **अमृतो भवति** - மோக்ஷத்தைப் பெற்றவனும் ஆகிறான். [பரிசுத்த ஜீவாத்ம ஸ்வரூப ப்ரதிபத்தி வழியாக ப்ரஹ்மோபாஸந ப்ரீதியை அடைகிறபடியால், இந்த ப்ராணோபாஸ்தி மோக்ஷஹேதுவாகக் கூடுமன்றோ?], **तत्** - அந்த ப்ராணோபாஸ்தியைக் குறித்து, **एष श्लोकः** இந்த ஶ்லோகம் பேசுகின்றது.

---

12. [ப - ரை.]. **प्राणस्य** - ப்ராணனுடைய, **उत्पत्ति** - உத்பத்தி

சென்ற ஏப்ரில் மாஸம் 28உ திநம் மதராஸில் பெரியதொரு ஸமிதி ஏற்படுத்தப்பட்டது. அதன் பெருமை அதில் சேர்ந்திருக்கும் வ்யக்திகளின் ஜ்ஞாநம் ஶக்தி லோகாநுபவம் முதலியவைகளி லிருந்தே விளங்கும். நமது வேதாந்தத்தைக் கேவலம் பழைய ரீதியில் மாத்ரம் படியாமல், இக்காலத்து ரீதியில் பாஷாந்தரத் தால் ஏற்படும் ஸம்ஸ்காரத்துடன் கற்றும், பாஶ்சாத்ய வித் வான்களெல்லாராலும் உயர்ந்த ஜ்ஞாநி யென்று கொண்டாடப்பட்டும் வரும் ஸர். எஸ். ராதாக்ருஷ்ணன் அந்த ஸங்கத்தின் முக்யமான அங்கத்தினருள் ஒருவர். பெரிய வைதிக வித்வத் ஸந்ததியில் ஜநித்து பாஷாந்தர வ்யுத்புத்தி யில் ஸ்வயமாகத விஜ்ஞாநரென்று சொல்லக்கூடுமளவு தேர்ச்சி பெற்று, தம்முடைய ஆயுள் நாள் முழுவதையும் பரார்த்தமாகவே உபயோகித்து வரும் வயோ வ்ருத்தரான மகாகனம் பொருந்திய வி. எஸ். ஸ்ரீநிவாஸ ஶாஸ்த்ரிகள் அந்த ஸங்கத்தின் அத்யக்ஷதையை வஹிக்கிறார். டாக்டர் டி. எம். பி. மகாதேவன், ஹைகோர்ட் ஜட்ஜ் சந்த்ரசேகர ஐயர், ப்ரஹ்ம ஸ்ரீ கே. பாலஸுப்ரஹ்மண்ய ஐயர் முதலான லௌகிக வித்வான்க ளும் அதில் அங்வயித்திருக்கிறார்கள். இவர்களெல்லாரும் ஸம்ஸ்க்ருதத்தில் சிறந்த ஜ்ஞாந முடையவர்கள்; நமது உபநிஷத் முதலிய மூல க்ரந்தங்களை ஸாக்ஷாத்தாகப் படித்தவர்கள்; புகழத்தக்க ஆத்மகுண முள்ளவர்கள்; த்ரிகரண ஶுத்தர்கள். இப்படிப்பட்ட வ்யக்திகளின் முயற்சி பலியாமலும் போகுமா?

பகவத் கீதா ஸமிதி

இவர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து, பகவத் கீதையானது நமது மஹா ஜநங்களிடம் நன்றாகப் பரவவில்லை யென்றும், அதை உபந்யாஸ மூல மாகவும் க்ரந்த மூலமாகவும் நமது தேஶத்திலுள்ள எல்லா பாஷைகளிலும் தெளிவான எளிய நடையில் மஹா ஜநங்களுக்கு உபதேஶித்தல் வேண்டு மென்றும் தீவ்ரமான எண்ணம் கொண்டு அதை ஸாதித்துக் கொள்வதற்கா கவே இந்த ஸமிதியை ஏற்படுத்தி யிருப்பதாக நாம் அறிகிறோம். இது ஒரு நல்ல கார்யமே. ஆனால், இவர்களால் எதிர் பார்க்கப்படும் உத்தேஶ்யம் கை கூடுவதற்கு எது முக்யமாக அபேக்ஷிதமோ அது இவர்களிடம் காணப்பட வில்லையே என்பது மாத்ரம் நமக்கு பலஸித்தியில் ஸந்தேஹத்தை ஜநிப்பிக் கின்றது. தத்வ விஷயத்தில் மாத்ரம் இவர்களுக்கு விஶ்வாஸம் இருக்கின்றதே தவிர்த்து அந்தத் தத்வ ஜ்ஞாநம் நிலைபெற்று நிற்பதற்கு அவஶ்யமான ஹேது வாகிற ஆசாரத்திலோ கர்மாநுஷ்டாநத்திலோ கொஞ்சமேனும் நம்பிக்கை இவர்களுக்கு இல்லையே. ஜ்ஞாந பக்த்யாதிகள் வருவதற்கு பகவத் கீதை ஒரு க்ரமத்தைக் விளக்குகின்றது. ஶாஸ்த்ரத்தால் தேஹாத்ம விவேகத்தைப் பெற்று அந்த விவேகத்தைப் பலாபிஸந்தி யின்றிக்கே செய்யப்படும் கர்மங் களின் சிரகால அநுஷ்டாநத்தால் வளர்த்தி, அநாதிகாலமாக நம்மை ஆக்ர மித்துக் கொண்டுவரும் காம க்ரோதாதிகளைப் பகவானுடைய க்ருபையை முன்னிட்டு ஜயித்து, அதற்குப் பிறகே ஆத்மஸாக்ஷாத்காரத்தையும் பகவத் பக்தியையும் பெறவேண்டும் என்பதே அந்த க்ரமம். அந்த க்ரமத்தை இவர்கள் கைவிட்டவர்கள். நிற்க, ஒரு ஸத்கர்மாவைச் செய்வதற்கு ஆசாரம் என்பது முக்ய காரணம். அந்த ஆசாரமே கர்மத்தை அநுஷ்டிப்பதற்கு அர்ஹதையைக் கொடுக்கின்றது என்று ஶாஸ்த்[ரம்] சொல்லுகின்றது. ஆ...

Regd. No. M. 4437

சாரம் கர்மாநுஷ்டாநம் இவை ஒன்றுமின்றிக்கே இந்த்ரியங்களை ஜயிக்கலாமென்றும் ஆத்ம ஜ்ஞாநத்தைப் பெறலாமென்றும் நினைப்பது ஒரு வித்யார்த்தி கீழ்வகுப்பு ஒன்றிலும் பரிஶ்ரமப்படாமல் மேல்வகுப்பில் சேர்வதற்கு ப்ரயத்நப்படுவதுபோல வீணேயாகுமன்றோ? ஆனால், இந்த க்ரமத்தை அநுஸரியாமல் இருக்குமவர்களுக்கும் மநஸ் பரிஶுத்தமாகி ஜ்ஞாநம் ப்ரகாஶித்துக் கொண்டிருக்கிறதைப் பார்க்கிறோமே என்று கேட்கலாம். அவர்கள் பூர்வ ஜந்மத்தில் ஆசாரங்களையும் கர்மங்களையும் யதோக்தமாக அநுஷ்டித்து, ஏதோ ஒரு பாபத்தின் பலமாக இந்த ஜந்மத்தில் அவர்களுக்கு அநுஷ்டாந லோபம் வந்திருக்கலாமென்பதும் அந்தப் பூர்வ ஜந்மங்களிற் செய்யப்பட்ட கர்மங்களின் பலமாக மநஸ்ஸில் காலுஷ்யம் நீங்கி அவர்களுக்கு ஜ்ஞாந பரிபாகம் ஸம்பவிக்க ஸம்பாவனை உண்டு என்பதும் அந்த ப்ரஶ்நத்திற்கு ஸமாதாநம். அது எல்லாருக்கும் நேருமோ?

நிற்க, காந ஶாஸ்ரத்தைப் படித்தால் மாத்ரம் காநம் எப்படி வர மாட்டாதோ, அந்தக் காநம் வருவதற்கு எப்படி ஒருவித ஶிக்ஷையைப் பெற வேண்டுமென்றும் நியமமுண்டோ, அம்மாதிரியே கீதா ஶாஸ்த்ர விஷயத்தைத் தெரிந்துகொண்ட மாத்ரத்தாலே ஸித்தி கிடைக்கமாட்டாது; கீதையிற் சொல்லப்பட்டுள்ள பலாபிஸந்திரஹித அநுஷ்டாநத்தைச் சரிவரச் செய்து அதில் தேர்ச்சி பெற்றே ஸித்தி பெறவேண்டும். இதற்கு இவர்கள் செய்யப்போகும் உபதேஶம் எவ்வளவு தூரம் உதவும்? ஸ்வயம் அநுஷ்டாநத்தில் ஶ்ரத்தையை உடைய மஹாநங்கள், ஸாத்விக ப்ரக்ருதிகளான ஸச்சிஷ்யர்களைச் சேர்த்துத் தமது அநுஷ்டாநத்தாலும் உபதேஶத்தாலும் ஜகத்தைச் சீர்திருத்த ப்ரயத்நப்பட்டால் ஜகத் சீர்திருந்துமே தவிர்த்து, இம்மாதிரி அர்த்த ஜரதீயந்யாய ப்ரகாரம் ஶாஸ்த்ரத்தின் ஒரு அம்ஶத்தை மாத்ரம் அவலம்பித்து மற்றொரு அம்ஶத்தை அநாதரித்து வரும் இவர்களுடைய ப்ரயத்நம் எவ்விதம் கவைக்கு உதவும் என்பது நமக்கு விளங்கவில்லை.

ஒரு ஶோசநீயமான ஸமாசாரம்

சென்ற திங்கள்கிழமை ஸாயம் ஸ்ரீ கருடபுரம் ஸ்வாமி திருநாட்டுக்கு எழுந்தருளிவிட்டாராம், ஒரு ஸாத்விகோத்தமரான மஹாந். ஸ்ரீ வைஷ்ணவ ஸமூகத்திற்கே பெரிய நஷ்டம், கைங்கர்யங்கள் பெருமாள் கோவிலில் நடக்கின்றன.

2/10/37

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

பார்த்திவஹூ வைகாசிமீ

1௨	திங்கட்கிழமை	—	ஶூந்ய திதி
2௨	செவ்வாய்க்கிழமை	—	ஶூந்ய திதி
3௨	புதன்கிழமை	–	வ்ருஷப சுக்ல பஞ்சமி திதி
9௨	செவ்வாய்க்கிழமை	—	ஸர்வ ஏகாதசி
10௨	புதன்கிழமை	–	த்வாதசி: ஹரிவாஸரம் 4–நாழிகை வரை
12௨	வெள்ளிக்கிழமை	—	ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தி
1[illegible]௨	சனிக்கிழமை	—	ஸ்ரீ நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்: ஸ்ரீ காஞ்சி வரதன் கருடஸேவை.
24௨	புதன்கிழமை	—	ஸர்வ ஏகாதசி
26௨	வெள்ளிக்கிழமை	–	த்ரயோதசி–சதுர்த்தசி திதித்வயம்
27௨	சனிக்கிழமை	—	அமாவாஸ்யை திதி: ஸர்வ அமாவாஸ்யை
30௨	செவ்வாய்க்கிழமை	—	வ்ருஷப சுக்ல த்ருதியை திதி
31௨	புதன்கிழமை	—	வ்ருஷப சுக்ல சதுர்த்தி திதி

...d by K. Satakopachari... the Liberty Press, 10, Linghi Chetty Street, G.T., Madras
...r, 5, Ramaswami St...